


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.3.2025) சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட 75வது ஆண்டு விழா மற்றும் சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் 160வது ஆண்டு விழாவில், சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் சிறப்பு மலரினை வெளியிட்டார். இவ்விழாவில், மாண்பமை உச்சநீதிமன்ற நீதிபதிகள் நீதியரசர் எம்.எம். சுந்தரேஷ், நீதியரசர் கே.வி. விஸ்வநாதன், ஆர். மகாதேவன், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் கே.ஆர். ஸ்ரீராம், அமைச்சர்கள் எஸ். ரகுபதி, பி.கே. சேகர்பாபு, அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்.ஆர்.இளங்கோ, பி. வில்சன், ஆர். கிரிராஜன், இந்திய கூடுதல் சொலிசிடர் ஜென்ரல் ஏஆர்எல். சுந்தரேசன், இந்திய முன்னாள் அட்டர்னி ஜென்ரல் கே. பராசரன், சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் எம். பாஸ்கர், செயலாளர் எஸ். திருவேங்கடம், மாண்பமை நீதியரசர்கள், மூத்த வழக்கறிஞர் ராஜய்யா உள்ளிட்ட வழக்கறிஞர்கள், சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (15.3.2025) முகாம் அலுவலகத்தில், மேயர் திருமதி ஆர். பிரியா சந்தித்து, உலக மகளிர் தினத்தையொட்டி 18.3.2025 அன்று சென்னை, பெரியார் திடலில் நடைபெறவுள்ள சென்னை பெருநகர கல்லூரி மாணவிகள் பங்கேற்கும் "தமிழ்மகள் நிகழ்ச்சிக்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் அமைச்சர் பி.கே. சேகர் பாபு சென்னை மாநகராட்சி மாமன்ற பெண் உறுப்பினர்கள் உள்ளனர்.

### இன்று சென்னையில் நடைபெறுகிறது!

# கவிப்பேரரசு வைரமுத்துவின் இலக்கிய படைப்புகள் குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – நீதியரசர் ஆர்.மகாதேவன் சிறப்புரை!

**சென்னை, மார்ச் 15-**

**கவிப்பேரரசு வைரமுத்துவின் 50 ஆண்டுகால இலக்கியப் படைப்புகளை அறிஞர் உலகம் ஆய்வு செய்கிறது. இந்தியப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் வெளிநாட்டுப் பல்கலைக் கழக ஆய்வாளர்களும் ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கிறார்கள்.**

இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கம் முழு நாள் நடக்கிறது. வைரமுத்து கவிதைகள், வைகறைமேகங்கள், திருத்தி எழுதிய தீர்ப்புகள், இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல, பெய்யெனப் பெய்யும் மழை, கொஞ்சம் தேநீர் நிறைய வானம், மகா கவிதை போன்ற கவிதைகளையும் கள்ளிக்காட்டு இதிகாசம், கருவாச்சி காவியம், மூன்றாம் உலகப் போர், தண்ணீர் தேசம் போன்ற நாவல்களையும் வைரமுத்து சிறுகதைகள், மற்றும் சிற்பியே உன்னைச் செதுக்குகிறேன், தமிழாற்றுப்படை உள்ளிட்ட கட்டுரை நூல்களையும் அவர் எழுதிய 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களையும் உலக அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து கட்டுரை வாசிக்கிறார்கள். சிங்கப்பூர், மலேசியா, சுவிட்சர்லாந்து, சீனா, துபாய் போன்ற நாடுகளிலிருந்தும் பேராசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் வருகை தருகிறார்கள்.

இன்று (மார்ச் 16, ஞாயிற்றுக்கிழமை) சென்னை லீலா பேலஸ் நட்சத்திர விடுதியில் நடக்கவிருக்கும் பன்னாட்டுக் கருத்தரங்கத்தை உச்ச நீதிமன்ற நீதியரசர் ஆர்.மகாதேவன் தொடங்கிவைக்கிறார். பேராசிரியர் மறைமலை இலக்குவனார் மொழிபெயர்த்த 'Vairamuthu's Mahakavithai' என்ற ஆங்கில நூலை முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் வெளியிட மலேசிய முன்னாள் அமைச்சர் டத்தோஸ்ரீ மு.சரவணன் முதற்படி பெற்றுக் கொள்கிறார்.

மாலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு நிறைவுரை ஆற்றுகிறார். கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து 'வைரமுத்தியம்' என்ற ஆய்வுக்கோவை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த நூலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட பாரத் பல்கலைக்கழக வேந்தர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி முதற்படி பெற்றுக் கொள்கிறார். கவிப்பேரரசு வைரமுத்து ஏற்புரையாற்றுகிறார். தேர்ந்தெடுக்கப்பட்ட பார்வையாளர்கள் மட்டுமே விழாவில் அனுமதிக்கப்படுகிறார்கள். டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் வேடியப்பன் விழாவை ஒருங்கிணைக்கிறார். கவிஞர் வைரமுத்து கல்வி அறக்கட்டளை விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

### எஸ்.மதன்மோகன் தலைமை! தயாநிதிமாறன் - மு.க.தமிழரசு நே.சிற்றரசு முன்னிலை !

# சேப்பாக்கம் பகுதி துணைச் செயலாளர் எஸ்.கே. ராஜ் இல்ல மணவிழா வரவேற்பு

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன்-பி.கே.சேகர் பாபு- சி.வெ.கணேசன்-கோவி.செழியன் வாழ்த்து

*சென்னை, மார்ச், 16*

சென்னை மேற்குமாவட்டம், சேப்பாக்கம் பகுதி துணைச் செயலாளர் எஸ்.கே. ராஜ்ஆர்.பவானி ஆகியோரின் புதல்வரும் 62வது வட்ட இளைஞர் அணி வட்ட அமைப்பாளருமான ஆர். கேசவன் எஸ்.ஜனனி ஆகியோரின் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் ஆகியோரின் நல் வாழ்த்துகளுடன்இன்று (16.3.2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 6 மணிக்கு சென்னை, எழும்பூர் ஆல்பர்ட் திரையரங்கம் அருகில் அமைந்துள்ள ஃபைஸ் மஹாலில் நடைபெறுகின்றது.

தயாநிதி மாறன் எம்.பி, மு.க.தமிழரசு, மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். வட்டச் செயலாளர்கள் ஆர்.ஜெகதீசன், கே.மகேஷ் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

மணமக்களை அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர் பாபு, சி.வெ. கணேசன், கோவி. செழியன், ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

மேலும் பி.பிரபாரகன், எம்.சின்னராஜ், கே.கோபி, ஏ. தமீம்அன்சாரி, ஜி.வெங்கடேசன், ஈஸ்வரி வெங்கடேசன், மிக்ஸி அலிப், எம்சி.பி. இளையராஜா, சா.மல்லிகாபீ, வி.பி. சிதம்பரம், பி.கணேஷ்பாபு, பி.பாலசந்த ர், ஜி.ராஜராஜன், எஸ்.கார்த்திக், எஸ்.எச்.ரகமத்துல்லா, சி.சாது, சி.சாய்குமார், வி.பி. கதிரவன், ஆர். வினோத்கண்ணா, அ.அமானுல்லா, ஏ.ஜஹாங்கீர், எம். தணிகாலசம், எம்.செல்வம், என்.அன்பழகன், எம்.நந்தகுமார், எஸ்.எஸ்.குமார், எஸ். எஸ்.கண்ணன், ஆர்.சிவராஜ், எஸ்.கஜேந்திரன், ஜி.ஜெ. கிரிதரன், வி.கார்த்திக், வெ.தமிமூன்பன், ஜெ. விஜய், எம். சுமதி, எம்.ரமணி, எம்.ராமச்சந்திரன், எம். மதிவாணன், எம்.கலைமகள், மணி என்கிற தேவராஜ், டி.விஜய கணபதி, பி.ஆர்.பாலாஜி, எம்.துரைசாமி, பி.ஜெயவேல், எம்.சுதாகர், என்.ஜகூர், என்.சுரேஷ், எஸ்.நிருபாசாகரன், எஸ்.சந்திரநாதன், ஆர்.முத்து, என்.சிவகார்த்தி, பொ.துரைக்கண்ணு, க.எல்லப்பன், பொ.மகாதேவன், உஷாகந்தவேல், ஏ. பவானி, பி.பாலவிநாயகம், கே.ஞானமூர்த்தி, பி. கார்த்திக், ஜி.ரகு, இ.ஜெ.வசந்தி, என்.ராஜேஷ், எஸ்.நரேஷ், எஸ்.தனசேகர், எஸ்.யசோதா, ஜி.கஸ்தூரி, எஸ்தேவகாந்தி, ஏ.ராதிகா, எஸ்.மீனா மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்

### பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட்டில்

# சைதை மேற்கில் முதல்வர் பிறந்தநாள்! மாபெரும் மருத்துவ முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

*சென்னை, மார்ச் 16-*

சைதை மேற்கில் - கழக தலைவர் தமிழக முதல்வர் 72வது பிறந்தநாளை முன்னிட்டு அப்போலோ மருத்துவமனை நடத்தும் மாபெரும் மருத்துவ முகாம் பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., ஏற்பாட்டில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைக்கிறார். தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், இரா.துரைராஜ் எம்.சி. பங்கேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழக முதல்வர் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட்டில் இன்று (16.03.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் உள்ள சைதை மேற்கு பகுதி கழக அலுவலகத்தில் அப்போலோ மருத்துவமனை நடத்தும் மாபெரும் மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிர மணியன் தொடக்கி வைக்கிறார்.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், 13வது மண்டல குழு தலைவருமான இரா. துரைராஜ், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன்,

அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சலராமன், கோ.பாஸ்கரன், வட்ட கழக செயலாளர்கள் எம். நாகா, எஸ்.பி.கோதண்டம், சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோ கமலநாதன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்.ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார்ரவி, ஜி.பாபு பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம் க.பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா. வெங்கடேசன், எம்.அருண், எஸ்.பரத்குமார்,

அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ. எஸ்.பழனி, எம்.எஸ்.மணி, ஏ.சந்தோஷ், எம்.மாறன், கே.தாஸ், கே.பிரபு, பிரஸ் கார்த்திக், மாவுமில் ஸ்ரீதர், கேபிள்காளி, டி.எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்மந்தம், கு.கார்த்திகேய்ன, தீ.ராஜ்குமார், த.மணி, என்.தீனதயாளம், வெ.புருசோத்தமன், ச.தினகர், ஆர்ட்ஸ் குமார், வெ.கிஷோர்குமார், பி.ஆர்.துரைராஜ், ஆர்.எஸ். டி.சிற்றரசு, டி.நரேஷ்குமார், எஸ்.ரவீந்திரகுமார், ஆர். ஜி.ஸ்டாலின், எம்.ஜி.மதிவாணன், கே.ஸ்டெல்லாமேரி, வி.செல்வி, ஜி.ராஜேஸ்வரி, பி.செண்பகம், எஸ்.சுந்தரி, பி.செல்வராணி,

அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆர்.ஜி.கற்பகம், ஆர்.தனா, பிடிசி குமார், ஆர். எஸ்.ரமேஷ், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, கோயில்எஸ். மணி, ஆட்டோஜான், சார்புசரவணன், பைரவமூர்த்தி, இரா. பாபு, பூ.பாஸ்கர், த.ஜெயராமன், எஸ்.விவேக்செல்வம், மாரியப்பன், கோகுல்குமார் உள்ளிட்ட வட்டகழக நிர்வாகிகள், அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பாக பொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள் உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

### தா.மோகன்குமார் எம்.சி. ஏற்பாட்டில்

# 168 'அ' வட்டத்தில் முதல்வர் பிறந்தநாள் மருத்துவ முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

*சென்னை, மார்ச் 16*

சைதை கிழக்குப் பகுதி 168வது "அ" வட்டத்தில் தா.மோகன்குமார் ஏற்பாட்டில் மாபெரும் மருத்துவ முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைக்கிறார். இரா.துரைராஜ், எம்.சி, எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்கு பகுதி 168வது "அ" வட்ட திமுக சார்பில் கழக தலைவர், தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு இன்று (16.03.2025 ஞாயிற்றுகிழமை) காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை மெட்ராஸ் மெடிகல் மிஷன் நடத்தும் மாபெரும் மருத்துவ முகாம் கிண்டி லையன்ஸ் கிளப் பள்ளி நடைபெற உள்ளது.

வட்டக் கழக செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான தா.மோகன்குமார் தலைமையிலும், பகுதி செயலாளர்கள் இரா.துரைராஜ், எம். கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் நடைபெறும் மருத்துவ முகாமினை மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் தொடங்கி வைக்கிறார்.

இம்முகாமில் பொது மருத்துவம், சர்க்கரை நோய் சிகிச்சை இதய பரிசோதனை, இசிஜி பரிசோதனை சைட்கேர் பவுண்டேஷன் நடத்தும் கண் மருத்துவ சிகிச்சை நடைபெற உள்ளது.

இந்நிகழ்விற்கு மாவட்ட பிரதிநிதி ச.சேகர், வட்ட நிர்வாகிகள் இ.சீனிவாசன், த. பாண்டியன், ஜி.என்.நாராயணன், மீனாபரமானந்தம், பகுதி பிரதிநிதிகள் ஈகை ஹரி, என்.மேகநாதன், டி.வெங்கடேசன், லிங்கேஸ்வரன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கொடிபாலா, இலக்கிய அணி பகுதி அமைப்பாளர் பார்சன் கே.லோகு, சிறுபான்மை அணி பகுதி அமைப்பாளர் எம்.எஸ்.எம்.ஷேக், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் மே.குணா உள்ளிட்ட 168வது "அ" வட்டத்தை சார்ந்த அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், கழக தோழர்கள், கழக முன்னோடிகள், பாகப் பொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள் பெருதிரளராக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான நல்லாட்சியை சீர்குலைக்க முயற்சிக்கும் –

# தமிழ்நாட்டு நலன்களுக்கு விரோதமாக செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்!

## காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் கு.செல்வப் பெருந்தகை கண்டன அறிக்கை!

*சென்னை, மார்ச் 16*

காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் கு.செல்வ ப்பெருந்தகை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழக அரசின் மக்கள் நலன் சார்ந்த, வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட நிதி நிலை அறிக்கையின் மீது கருத்து கூறிய தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, இந்தியாவிலேயே அதிக கடன் பெற்றுள்ள மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்று குற்றம் சாட்டியிருக்கிறார். இதற்கு குஜராத் மாநிலத்தோடு ஒப்பிட்டு பேசியிருக்கிறார். ஆனால், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அரசியல் சமூக ஆய்வாளர் பேராசிரியர் கிறிஸ்டோஃப் ஜாஃப்ரெலாட் என்பவர் ஆய்வு செய்து வெளியிட்ட அறிக்கையின்படி, ஊட்டச்சத்து குறைபாடு, வறுமை இடைவெளி, வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் விகிதம் உள்ளிட்ட பல விஷயங்களில் குஜராத் மாநிலம் பின்தங்கிய மாநிலமாக பீகாருக்கு அருகில் உள்ளது.

கல்வி விகிதம் பெரிதாக இல்லை. கல்வியில் குறைந்த முதலீடுகள் காரணமாக குஜராத்தில் சமத்துவமின்மை நீடித்து வருகிறது. கல்வி, சுகாதாரம் ஆகியவற்றுக்காக குஜராத் மாநிலம் செலவிடுவது மிகமிக குறைவாக உள்ளது. இந்த விஷயத்தில் தமிழ்நாட்டை நெருங்கக் கூட முடியாது. ஆனால், இந்தியாவில் ஒரு சிறந்த மாடல் என்று இருந்தால் அது தமிழ்நாடு தான் என்று நாட்டில் உள்ள பல பொருளாதார அறிஞர்கள் பாராட்டுகிறார்கள். வறுமையை முற்றிலும் ஒழித்து அதிவேகத்தில் தொழில்மயமாக்கி, அதிக சேவைகள் தொழில்துறையிலிருந்து பெற்று வருகிறது.

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் கடனைப் பற்றி பேசுவதா?**

தமிழ்நாட்டின் கடன் பற்றி பேசுகிற அண்ணாமலை, ஒன்றிய பா.ஜ.க. அரசின் கடனைப் பற்றி பேச மறுக்கிறார். 1947 முதல் 2014 வரை இந்தியாவின் மொத்த கடன் 67 ஆண்டுகளில் ரூபாய் 55 லட்சம் கோடி தான். ஆனால், 2025 இல் 11 ஆண்டுகளில் ரூபாய் 185 லட்சம் கோடி கடனாக உயர்ந்திருக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவின் கடன் 89.6 சதவிகிதமாகி திவாலான நிலையில் உள்ளது. அதேபோல, ஒவ்வொரு இந்தியரின் மீதும் ரூபாய் 1.5 லட்சம் கடன் சுமை ஏற்றப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், நடப்பாண்டில் ரூபாய் 14 லட்சம் கோடி கடன் வாங்கப் போவதாக நிர்மலா சீதாராமன் அறிவித்திருக்கிறார். இதைத் தவிர வெளிநாட்டுக் கடன் 6 லட்சத்து 63 ஆயிரம் கோடி ரூபாய் இருக்கிறது. கடந்த 67 ஆண்டுகளில் காங்கிரஸ் உள்ளிட்ட ஒன்றிய அரசுகள் பெற்ற மொத்த கடன் ரூபாய் 55 லட்சம் கோடி. 11 ஆண்டுகளில் பா.ஜ.க. அரசு பெற்ற கடன் ரூபாய் 130 லட்சம் கோடி. தமிழ்நாட்டின் கடனைப் பற்றி பேசுவதற்கு அண்ணாமலைக்கு என்ன உரிமை இருக்கிறது ? மேலும், 2021 இல் அ.தி.மு.க. ஆட்சி வைத்து விட்டு போன கடன் ரூபாய் 5 லட்சத்து 70 ஆயிரம் கோடி. இந்நிலையில் தான் தி.மு.க. ஆட்சி பொறுப்பினை ஏற்றதை எவரும் மறந்திட இயலாது.

தமிழ்நாட்டிலிருந்து 2024-25 இல் ஒன்றிய அரசு நேரடி வரி மூலமாக பெற்றது ரூபாய் 1 லட்சத்து 95 ஆயிரம் கோடி. அதேபோல, ஜனவரி வரை மொத்தம் பெற்ற ஜி.எஸ்.டி. வரி ரூபாய் 1 லட்சத்து 95 ஆயிரம் கோடி. ஆனால், இதே காலகட்டத்தில் ஒன்றிய அரசின் வரிகளில் தமிழ்நாட்டின் பங்காக ரூபாய் 58 ஆயிரத்து 22 கோடி தான் வழங்கியிருக்கிறது.

நாம் ஒன்றிய அரசுக்கு ஒரு ரூபாய் வரியாக கொடுத்தால் 29 பைசா தான் திரும்ப வருகிறது. ஆனால், உத்தரபிரதேசத்திற்கு 2 ரூபாய் 13 பைசா செல்கிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரை அனுமதிக்கப்பட்ட கடன் வரம்புக்கு உட்பட்டு தான் நிதி நிலைமை இருக்கிறது. ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசின் கோரிக்கைகளை தொடர்ந்து புறக்கணித்து வந்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக நிதிநிலை அறிக்கையில் தேவையான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.



**ஒன்றிய அரசின் பாரபட்சம்!**

தமிழ்நாட்டில் கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்ட மொத்த தொகை ரூபாய் 46,760 கோடி. ஒன்றிய அரசு நாடு முழுவதற்கும் கடந்த பட்ஜெட்டில் கல்வித்துறைக்கு ஒதுக்கிய தொகை ரூபாய் 78,572 கோடி. ஆனால், புதிய கல்விக் கொள்கையையும், மும்மொழி திட்டத்தையும் ஏற்க மறுத்த காரணத்தால் சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்திற்கு வழங்க வேண்டிய ரூபாய் 2152 கோடியையும், பி.எம்;.ஸ்ரீ பள்ளிகளுக்கு ஒதுக்க வேண்டிய ரூபாய் 2000 கோடியையும் ஒதுக்காமல் பா.ஜ.க. ஆட்சி செய்கிற குஜராத் போன்ற மாநிலங்களுக்கு அந்த தொகையை ஒன்றிய அரசு பாரபட்சமாக திருப்பி விட்டிருக்கிறது.

கடும் புயலினால் சென்னை உள்ளிட்ட தென் மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்ட போது, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 38,000 கோடி நிவாரண தொகை கேட்டு தமிழ்நாடு முதலமைச்சர் பலமுறை கடிதம் எழுதினார். அதற்கு பலனளிக்காத நிலையில் பேரிடர் மேலாண்மை சட்டம் 2005ன்படி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டிற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியில் பங்காக வர வேண்டிய ரூபாய் 276 கோடியை தான் ஒன்றிய அரசு விடுவித்ததே தவிர, தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து சல்லிக் காசு கூட விடுவிக்கவில்லை.

தமிழ்நாடு முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டது. இந்நிலையில் கடுமையான நிதி பற்றாக்குறை இருந்தாலும் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒன்றிய அரசு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தமிழ்நாட்டை வஞ்சிக்கிற போக்கை எதிர்கொள்கிற வகையில், தன் சொந்த நிதியிலிருந்து கல்வித்துறை உள்ளிட்ட வெள்ள நிவாரணப் பணிகளை மிகுந்த துணிவுடன் மேற்கொண்டு வருகிறது.

**தமிழ்நாடே கடும் கொந்தளிப்பு!**

எனவே, தமிழ்நாட்டு நலன்களுக்கு விரோதமாக செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடே கடும் கொந்தளிப்பில் இருக்கிறது. இந்தி பேசாத மக்களுக்கு பண்டித நேரு கொடுத்த வாக்குறுதியையும், சட்டப் பாதுகாப்பையும் மீறி தமிழகத்தின் மீது இந்தியை திணிக்கிற முயற்சிக்கு ஆதரவாக தமிழ்நாட்டில் 90 நாட்கள் கையெழுத்து இயக்கம் நடத்துகிற அண்ணாமலைக்கு வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் உரிய பாடத்தை நிச்சயம் புகட்டுவார்கள்.

தமிழக பட்ஜெட் சமர்ப்பித்ததன் மூலம், மக்களின் அமோக ஆதரவை சீர்குலைக்கும் நோக்கத்தில், அதே நாளில் அமலாக்கத்துறை டாஸ்மாக் முறைகேடு கள் குறித்து அவதூறு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. இந்த குற்றச்சாட்டுக்கு என்ன ஆதாரம் இருக்கிறது ? ஏதாவது ஆதாரம் இருந்தால் அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமே தவிர, அதற்கு முன்பாகவே அமலாக்கத்துறையின் அறிக்கை ஊடகங்களின் மூலம் வெளியிடுவதற்கு அண்ணாமலை ஒரு தூண்டு கோலாக அமைந்திருக்கிறார்.

வருமான வரித்துறை, அமலாக்கத்துறை ஆகியவற்றுடன் கூட்டணி வைத்துக் கொண்டு மக்கள் நலன் சார்ந்த, மக்களின் பேராதரவுடன் செயல்படுகிற மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான நல்லாட்சியை சீர்குலைக்க எத்தகைய ஜனநாயக விரோத முயற்சிகள் எடுத்தாலும் அதில் அண்ணாமலை வெற்றி பெற முடியாது.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### 'எல்லார்க்கும் எல்லாம்' எனும் உயரிய நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்!

# தமிழ்நாட்டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளம்!


## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

*சென்னை, மார்ச் 16 -*

விளிம்பு நிலை மக்களை அரவணைக்கும் வகையில் 'எல்லார்க்கும் எல்லாம்' எனும் உயரிய நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட் எனவும் தமிழ்நாட்டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளமாக இந்த பட்ஜெட் அமைந்துள்ளது எனவும் தினகரன் நாளேடுதலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசின் 2025-26ம் நிதி ஆண்டுக்கான பொது பட்ஜெட்டை சட்டப்பேரவையில் நிதி யமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று தாக்கல் செய்தார். சட்டப்பேரவை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நிலையில் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு நடுவே, இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. நிதி அமைச்சராக தங்கம் தென்னரசு தாக்கல் செய்துள்ள 2வது பட்ஜெட் இதுவாகும்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று 4 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், 5ம் ஆண்டில் தாக்கல் செய்யப்படுகின்ற பட்ஜெட் என்பதால் அனைத்து தரப்பினரிடையேயும் பலத்த எதிர்பார்ப்புகள் இருந்தது. பட்ஜெட் உரையை தாக்கல் செய்து பேசிய நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, "இந்தியாவின் 2வது பெரிய பொருளாதாரம் கொண்ட


தினகரன்
மார்ச் 15, 2025 சனிக்கிழமை
எல்லார்க்கும் எல்லாம்

மாநிலம் தமிழ்நாடு" என்று பெருமிதம் தெரிவித்தார். மேலும், "பன்முக வளர்ச்சியை நோக்கி தமிழ்நாடு முன்னேறி வருகிறது. மனிதநேயம், சமூக நீதி, பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு தமிழ்நாடு நடைபோடுகிறது. சமநிலை தவறாமல் தமிழ்நாட்டை வழிநடத்துவோம்" என்றார். முதன்முறையாக பட்ஜெட் விபரங்களை பொதுமக்கள் எளிதில் தெரிந்து கொள்ள வசதியாக தமிழ்நாடு முழுவதும் மக்கள் அதிகம் கூடும் 900க்கும் மேற்பட்ட இடங்களில் பெரிய திரைகளில் நேரலை செய்யப்பட்டது. பொதுமக்களின் செல்போன்களுக்கு பட்ஜெட்டில் இடம் பெற்றிருந்த விபரங்கள் குறுந்த கவல்களாக வும் அனுப்பப்பட்டன.

இந்த பட்ஜெட்டை தொழில்துறையினர், பொது மக்கள், வணிகர்கள், அரசு ஊழியர்கள் என அனைத்து தரப்பினரும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் அனைவரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏமாற்றமளிக்காத வகையில், பட்ஜெட்டில் ஏராளமான அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன. கிராமங்கள் முதல் பெருநகரங்கள் வரையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், அனைத்து துறைகளையும் சார்ந்த புதிய திட்டங்கள், புதிய கல்லூரிகள் தொடங்குதல், திறன்மிகு மையங்கள் உருவாக்குதல், மகளிரை தொழில் முனைவோராக உயர்த்திடும் பெருந்திட்டங்கள், நகர்ப்புற பகுதிகளில் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்தல், அரசு ஊழியர்கள், அலுவலர்களுக்கு ஈட்டிய விடுப்பு 15 நாட்கள் வரை சரண் செய்து பணப்பலன் பெறும் நடைமுறையை மீண்டும் செயல்படுத்துதல், மாநிலம் முழுவதும் பல்வேறு வகையான தொழிற்பூங்காக்கள் உருவாக்குதல், வேட்டைப் பறவைகள் ஆராய்ச்சி மையம், மின்சார பேருந்துகள், அறிவியல் மையம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்த அறிவிப்புகள் பட்ஜெட்டில் வெளியாகி மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

திருக்குறளை 193 மொழிகளில் மொழி பெயர்த்தல், சிங்கப்பூர், துபாய், மலேசியாவில் தமிழ்ப் புத்தகக் கண்காட்சி, தமிழ்நாடு முழுவதும் தொல்லியல் மற்றும் அகழ்வாராய்ச்சி ஆய்வு மேற்கொள்ளுதல் என தமிழ்மொழியை உலக அரங்கில் கொண்டு செல்லவும், தமிழர்களின் தொன்மை நாகரிகத்தை உலகம் அறியச் செய்யவும் பல அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன.

இப்படி மகளிர் நலன் காக்கும் மாபெரும் திட்டங்கள், ததும்பி வழியும் தமிழ்ப் பெருமிதம், இளைஞர்களுக்கு உலகை வெல்லும் உயர் தொழில்நுட்பம், தமிழ்நாடெங்கும் வேலைவாய்ப்புகளை அள்ளித்தரும் தொழிற்பூங்கா திட்டங்கள், புதிய நகரம், புதிய விமான நிலையம், புதிய நீர்த்தேக்கம், அதிவேக ரயில் சேவை என நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிடும் முன் முயற்சிகள் பல பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளன. விளிம்பு நிலை மக்களை அரவணைக்கும் வகையில், 'எல்லார்க்கும் எல்லாம்' எனும் உயரிய நோக்கத்துடன் தமிழ்நாட்டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளமாக இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாக அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்படுகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.